செ.வெ.எண்.335/2009/செமதொஅ நாள்:09.10.2009

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் 5 ஊராட்சி ஒன்றியங்களில் அலுவலக புதிய கட்டடம் விரைவில் கட்டி முடிக்கப்படவுள்ளது - மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தகவல்.**

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றிய அலுவலக புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா, பாரத பிரதமர் கிராம சாலைகள் மேம்பாட்டு பணிகள் துவக்க விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு ரூ.150 கோடியில் கட்டப்படவுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அடிக்கல் நாட்டி பாரத பிரதமர் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டப் பணிகள் துவக்கி வைத்து, சமூக நலத்துறையின் சார்பில் மூவலூர் இராமமிர்த அம்மையார் திருமண உதவி திட்டத்தின் கீழ் 54 நபர்களுக்கு ரூ.10.58 இலட்சம் உதவித் தொகைகளை வழங்கி விழா பேருரையாற்றியதாவது,

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் புதிய அலுவலகம் ரூ.1.50 கோடி மதிப்பீட்டில் கட்ட அடிக்கல் நாட்டப்படும் நல்ல நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். ஏற்கனவே இருந்த பழைய கட்டடம் இடிக்கப்பட்டு புதிய கட்டிடம் கட்டப்படவுள்ளது. மாவட்டத்தில் உள்ள காஞ்சிபுரம், மதுராந்தகம், சித்தாமூர், திருபெரும்புதூர், காட்டாங்கொளத்தூர் ஆகிய ஊராட்சி ஒன்றிய பழைய கட்டடங்களுக்கு பதிலாக ரூ.7.50 கோடியில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு விரைவில் திறக்கப்படவுள்ளது. குன்றத்தூர், திருக்கழுக்குன்றம் ஆகிய ஊராட்சிகளுக்கு புதிய கட்டடம் கட்ட திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் அந்த ஊராட்சி ஒன்றியங்களிலும் புதிய கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மரத்தடியில் படித்துக்கொண்டு இருந்த மாணவ மாணவிகளுக்கு கோடிக்கணக்கான மதிப்பீட்டில் பள்ளி கட்டடங்கள் கட்டப்பட்டு தமிழகம் முழுவதும் திறந்து வைக்கப்பட்டு வருகிறது. அதேபோன்று புதிய காவல் துறை அலுவலகங்கள், சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவை தமிழகம் முழுவதும் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஆட்சியில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. இன்று சமூக நலத்துறையை சார்ந்த மூவலூர் இராமமிர்த அம்மையார் திருமண உதவி திட்டத்தின் கீழ் 54 நபர்களுக்கு ரூ.10.58 இலட்சம் உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்தகால ஆட்சியில் எந்தவித பணிகளும் நடைபெறாமல் இருந்தது. கலைஞர் ஆட்சியில் தமிழகம் முழுவதும் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. நீண்ட காலமாக அரசு புறம் போக்கில் குடியிருந்தவர்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் 7½ லட்சம் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் 45 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளது.

நகர் புறத்தில் வசிக்கின்ற மக்களைப் போல் கிராம புறத்தில் வசிக்கின்ற மக்களும் அனைத்து வசதிகளும் பெற்று வாழ வேண்டும் என்பதற்காக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டம் கொண்டு வந்து ஒரு ஊராட்சிக்கு ரூ.20 இலட்சம் வீதம் வழங்கப்பட்டு சிமெண்ட் சாலை, சோடியம் ஆவிவிளக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர், நூலகம், பூங்கா, குளம் தூர்வருதல், மயானம் அமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. தமிழகத்தில் 12500 ஊராட்சிகளில் 10 ஆயிரம் ஊராட்சிகளுக்கு தலா ஒரு ஊராட்சிக்கு ரூ.20 லட்சம் வழங்கப்பட்டு அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு தன்னிறைவு பெற்றுள்ளன.

காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் ரூ.18 கோடியில் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டு திட்டம் கொண்டு வரப்பட்டு சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். காப்பீட்டு திட்டத்திற்கான பிரிமியம் தொகை ரூ.570 கோடி அரசே செலுத்தயுள்ளது. ஏழை-எளிய மக்களின் நலன் காக்க மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அயராது பாடுபட்டு வருகிறார் என கூறினார்.

விழாவில் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட முகமை திட்ட அலுவலர் டாக்டர்.இரா.ஆனந்தகுமார் இ.ஆ.ப. அவர்கள் தலைமையுரையாற்றினார். ஊராட்சி ஒன்றியகுழு தலைவர் திரு.பி.எம்.குமார் வரவேற்றுப் பேசினார். முடிவில் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.கே.எம்.ரகுராமன் நன்றி கூறினார். விழாவில் திரு.சி.வி.எம்.அ.சேகர், திரு.கி.ஆறுமுகம், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் திரு.எ.அசோகன், திரு.கோ.சுந்தர் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.